©
தமிழ்நாடு அரசு
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 5] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 3, 2021
தை 21, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2052

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**வேளாண்மை துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 287, வேளாண்மை (AP3) துறை, நாள் 4 டிசம்பர் 2020.]*

**1985** ஆம் ஆண்டு உரக்கட்டுப்பாட்டு ஆணையின் 27 ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 02–03–2011 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் – II பிரிவு (1)–இல் 12 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட வேளாண்மைத் துறையின் II(1)/AG/8/2011 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன அறிவிக்கையின் அட்டவணையில், நெடும்பத்தி (1)–இல் 'அலுவலர்கள்' என்ற தலைப்பின் கீழ்,

(1) "8 வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாட்டு பிரிவு) என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘8 வேளாண்மை உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு)’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்;

(2) ‘‘9. வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாட்டு பிரிவு), திருவள்ளூர்’’, என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘9. வேளாண்மை உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு), திருவள்ளூர்’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை–II**

*[அரசாணை (நிலை) எண் 287, வேளாண்மை (AP3) துறை, நாள் 4 டிசம்பர் 2020.]*

**1985** ஆம் ஆண்டு உரக்கட்டுப்பாட்டு ஆணையின் 26A ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 02–03–2011 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் – II பிரிவு (1)–இல் 13 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட வேளாண்மைத் துறையின் II(1)/AG/10/2011 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில் ‘‘வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாட்டு பிரிவு)’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘வேளாண்மை உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு)’’ என்ற சொற்றொடர் அமைத்து கொள்ளப்பட வேண்டும்;

**அறிவிக்கை–III**

*[அரசாணை (நிலை) எண் 287, வேளாண்மை (AP3) துறை, நாள் 4 டிசம்பர் 2020.]*

**1985** ஆம் ஆண்டு உரக்கட்டுப்பாட்டு ஆணையின் 32A ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 02.03.2011 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் – II பிரிவு (1)–இல் 13 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட வேளாண்மைத் துறையின் II(1)/AG/11/2011 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில் ‘‘வேளாண்மை உதவி இயக்குநர் (துரக்கட்டுப்பாட்டு பிரிவு)’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘வேளாண்மை உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு)’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

**ககன்தீப் சிங் பேடி,**
*வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்*
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**இ. சுபாமதி,**
*இயக்குநர் (முகூபொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையர் அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.